# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1906/50 - 2015 මාර්තු මස 21 වැනි සෙනසුරාදා - 2015.03.21

*1906/50 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்**

*10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

***மினிபே பிரதேச சபை***

*மினிபே பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. பண்டாரநாயக முதியன்சேலாகே ஷாந்த சிசர குமார பண்டாரநாயக, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென மினிபே பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் முதியன்சேலாகே குமுது சமன் ஸ்ரீ ரத்நாயக ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ (1) (அ) என்னும் பிரிவின்கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*சமன் ஸ்ரீ ரத்நாயக,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*மினிபே பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*கண்டி,*
*2015, மாச்சு 20.*

*4- 210*

---

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*இறப்பெய்தியமை காரணமாக வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் உறுப்பினரொருவரது பதவி வெற்றிடமாகியுள்ள தாதலாலும் ;*

*குணதிலகே ஆரியவங்ச என்னும் பதவி வகித்த உறுப்பினர் அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. குணபாலகே சரத் மது என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அப்துல் ஒபூர் முகம்மது நபீல் ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. குணபாலகே சரத் மது என்பவர் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஏ. ஓ. எம். நபீல்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
வவுனியா,
2015, மாச்சு 20.

4-211

---

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்**

10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

**குருநாகல் பிரதேச சபை**

குருநாகல் பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. மொஹொட்டாலலாகே திலின தனுஷ்க ஏகநாயக , ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென குருநாகல் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் தலங்கம அப்புஹாமிலாகே சமிந்த நாமல் தலங்கம ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ (1) (அ) என்னும் பிரிவின்கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

டீ. ஏ. சீ. என். தலங்கம,
தெரிவத்தாட்சி அலுவலர்,
குருநாகல் பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
குருநாகல்,
2015, மாச்சு 20.

4- 212

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.